# இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு

## விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

## 2026/2027 ஆண்டிற்கு துப்புரவு மற்றும் தூய்மை பணி சேவைகளை வழங்குதல்.

## ஒப்பந்த இலக்கம் : TRC/ADM/01/24/02/01

கொழும்பு - 08, எல்விட்டிகல மாவத்தை, இல.276, இல் அமைந்துள்ள இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் திணைக்கள பெறுகைக் குழு (மேல்நிலை) தலைவரினால் இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவிற்கு 2026/2027 ஆம் ஆண்டிற்கான ஒரு வருட காலத்திற்கு துப்புரவு மற்றும் தூய்மை பணி சேவைகளை கொள்முதல் செய்வதற்காக தகுதி மற்றும் தகைமை பெற்ற விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரை குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

1. தேசிய போட்டிசார் விலைமனுக்கோரல் (NCB) நடைமுறையின் கீழ் விலைமனுக்கள் மேற்கொள்ளப்படுவதோடு, இலங்கையைச் சேர்ந்த விலைமனுதாரர்களுக்கு மட்டுமே அனுமதி வழங்கப்படும்.

2. இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு, கொழும்பு - 08, 276, எல்விட்டிகல மாவத்தையில் அமைந்துள்ள தலைமை அலுவலகக் கட்டிடம், ஹந்தானை (கண்டி), கதிரான (நீர்கொழும்பு) ஆகிய இடங்களில் அமைந்துள்ள அதிர்வெண் கண்காணிப்பு நிலையங்கள் மற்றும் கொக்காவில்லில் அமைந்துள்ள தொலைக்காட்சி/ஒளிபரப்பு பரிமாற்ற நிலையம் ஆகியவற்றிற்கு ஒரு வருட காலப்பகுதிக்கு துப்புரவு மற்றும் தூய்மைப் பணி சேவைகளை பெற்றுக் கொள்ள எதிர்பார்க்கப்படுகின்றது.

3. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் கொழும்பு - 08, எல்விட்டிகல மாவத்தை, இலக்கம்.276, இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் பணிப்பாளர் (நிர்வாகம் மற்றும் கூட்டுறவு அலுவல்கள்) நிர்வாகப் பிரிவில் அல்லது 011-2669789 என்ற தொலைபேசி இலக்கத்தை தொடர்பு கொள்வதன் மூலம் இது பற்றிய மேலதிக விபரங்களை பெற்றுக் கொள்ள முடியும். 2026.08.11 ஆம் திகதி தொடக்கம் 2026.08.24 ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப.09.00 மணி முதல் பி.ப.3.00 மணி வரை இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் நிர்வாகப் பிரிவில் விலைமனு ஆவணங்களைப் பார்வையிட முடியும்.

4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்களுக்கு 2026.08.11 தொடக்கம் 2026.08.24 வரையான வாரத்தின் வேலை நாட்களில் மு.ப.09.00 மணி முதல் பி.ப.03.00 வரை மீளளிக்கப்படாத விலைமனு கட்டணமாக ரூ.5,000.00 ஐ பணமாக செலுத்தி, கொழும்பு - 08, எல்விட்டிகல மாவத்தை, இலக்கம். 276, இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் பணிப்பாளர் / நிர்வாகம் மற்றும் கூட்டுறவு அலுவல்கள் பிரிவிற்கு எழுத்து மூல விண்ணப்பம் ஒன்றை முன்வைப்பதன் பேரில் ஆங்கில மொழியில் அமைக்கப்பட்ட முழு விலைமனு ஆவணத் தொகுப்பை கொள்வனவு செய்ய முடியும்.

5. அனைத்து விலைமனுவுடன் விலைமனு பிணை ஒன்று முன்வைக்கப்பட வேண்டும். விலைமனு பிணையின் பெறுமதி ரூ.195,000.00 ஆக காணப்பட வேண்டும்.

6. முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் உள்ளடக்கப்பட்ட கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "2026/2027 ஆண்டிற்கு துப்புரவு மற்றும் தூய்மை பணி சேவைகளை வழங்குதல்" எனக் குறிப்பிட்டு 2026.08.25 ஆம் திகதி பி.ப.2.00 மணி அல்லது அதற்கு முன்னர் நிர்வாகம் மற்றும் கூட்டுறவு அலுவல்கள் பிரிவு, இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு, இல.276, எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு - 08 என்ற முகவரிக்கு கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்புதல் அல்லது இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் நிர்வாக மற்றும் கூட்டுறவு அலுவல்கள் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் முடியும். விலைமனு ஏற்றுக் கொள்ளல் நிறைவு பெற்ற உடனே 2026.08.25 ஆம் திகதி பி.ப.2.00 மணியின் பின்னர் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களினால் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியின் முன்னிலையில் விலைமனு திறக்கப்படும். குறிப்பிட்ட நிறைவு பெற்ற நேரத்தின் பின் கிடைக்கப்பெறுகின்ற விலைமனுக்கள் தாமதமாக கிடைக்கப்பெற்ற விலைமனுக்கள் எனக் கருதி அவை நிராகரிக்கப்படும். சமர்ப்பிக்கப்படுகின்ற அனைத்து விலைமனுக்களுக்குமான இறுதித் தீர்மானம் எடுக்கும் உரிமை இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவிற்கே உரியது.

7. விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கு முன்னர் விலைமனு முன் கூட்டம் 2026.08.18 ஆம் திகதி மு.ப.11.00 க்கு இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் பிரதான காரியாலயத்தில் நடைபெறும்.

தலைவர்,
திணைக்கள பெறுகைக் குழு (மேல்நிலை),
இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு,
276, எல்விட்டிகல மாவத்தை,
கொழும்பு - 08

2026.08.10